www.Padasalai.Net V12A.. விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள் www.CBSEtips.in

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

-----

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி **கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**20×1=20**

குறிப்பு: 1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
2. **கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally-ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்?
அ) பெறுதல் சான்றாவணம் ஆ) உரிய குறிப்பேடு சான்றாவணம்
இ) கொள்முதல் சான்றாவணம் ஈ) செலுத்தல்கள் சான்றாவணம்
2. அலுவலகப் பயன்பாட்டிற்காக 25,000 வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது. எந்த வகை சான்றாவணத்தில் இந்த நடவடிக்கை பதியப்படும்?
அ) எதிர் பதிவு சான்றாவணம் ஆ) பெறுதல் சான்றாவணம்
இ) செலுத்தல்கள் சான்றாவணம் ஈ) விற்பனை சான்றாவணம்
3. நடப்பு பொறுப்பு ₹ 40,000; நடப்பு சொத்து ₹ 1,00,000; சரக்கிருப்பு ₹ 20,000 எனில் விரைவு விகிதம்
அ) 1:1 ஆ) 2.5:1 இ) 2:1 ஈ) 1:2
4. பட்டியல் I-ஐ பட்டியல் II-உடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| i) நடப்பு விகிதம் | 1. நீர்மைத் தன்மை |
| ii) நிகர லாப விகிதம் | 2. செயல் திறன் |
| iii) புற அக பொறுப்புகள் விகிதம் | 3. நீண்ட கால கடன் தீர்க்கும் திறன் |
| iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | 4. இலாபத்தன்மை |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

5. ஒரு பொது அளவு இருப்பு நிலைக் குறிப்பில், நீண்ட காலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில் நடப்பு சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100
6. இருப்பு நிலைக்குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதி நிலை பற்றிய தகவல்களை வழங்குகிறது.
அ) ஒரு கால கட்டத்திற்கு மேலான ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய
7. ₹ 8 செலுத்தப்பட்ட ₹ 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை
அ) பங்கொன்று ₹ 10 ஆ) பங்கொன்று ₹ 8 இ) பங்கொன்று ₹ 5 ஈ) பங்கொன்று ₹ 2
8. நிறும கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல் இ) முதலின காப்பு ஈ) காப்பு முதல்
9. மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
10. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாத போது அது மாற்றப்படும் கணக்கு
அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு
11. கூட்டாளி சேர்ப்பின் போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டுவரும் தொகை யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப் பட வேண்டும்?
அ) அனைத்து கூட்டாளிகள் ஆ) பழைய கூட்டாளிகள்
இ) புதிய கூட்டாளி ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்
12. பட்டியல் I-ஐ, பட்டியல் II-உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டைப் பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| i) தியாக விகிதம் | 1. முதலீட்டு மாறுபடும் நிதி |
| ii) பழைய இலாப பகிர்வு விகிதம் | 2. பதிர்ந்து தரா இலாபம் |
| iii) மறுமதிப்பீட்டு கணக்கு | 3. நற்பெயர் |
| iv) முதல் கணக்கு | 4. பதிவுறா பொறுப்பு |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 1 | 2 | 4 |

13. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி
14. சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும் போது உயல் லாபம்
அ) ₹ 25,000 ஆ) ₹ 5,000 இ) ₹ 10,000 ஈ) ₹ 15,000
15. கூட்டாண்மை நிறுவனத்தில், நிலைமுதல் முறை பின்பற்றப்படும்போது, பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
அ) கூடுதல் முதல் கொண்டு வந்தது ஆ) முதல் மீது வட்டி இ) எடுப்புகள் மீது வட்டி ஈ) இலாபப் பகிர்வு
16. ஒரு கூட்டாளி ஒவ்வொருமாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக்கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக் குரிய மாதங்கள் சராசரியாக
அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

17. பெறுதல்கள் மற்றும் செலுத்தல் கணக்கின் இருப்பு காட்டுவது
   அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
   ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக்காட்டிலும் மிகுதியான வருமானம்
   இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்க செலுத்தல்கள் ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

18. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹ 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னும் பெறப்படாதது ₹ 200; முன் கூட்டிப் பெற்ற சந்தா ₹ 300 வருவாய், செலவினக் கணக்கில் காட்டப்படவேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.
   அ) ₹ 50,000 ஆ) ₹ 50,200 இ) ₹ 49,900 ஈ) ₹ 49,800

19. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்த கடனாளிகள் க/கு ஆ) மொத்த கடனீந்தோர் க/கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு

20. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹ 30,000; பெற்ற ரொக்கம் ₹ 1,00,000; கடன் விற்பனை ₹ 90,000; கடனாளிகள் இறுதி இருப்பு?
   அ) ₹ 30,000 ஆ) ₹ 1,30,000 இ) ₹ 40,000 ஈ) ₹ 20,000

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: 7×2=14**

21. நிலையறிக்கை என்றால் என்ன?
22. உயில் கொடை - குறிப்பு வரைக.
23. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் வருவாய் செலவின கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.
   1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு ₹ 16,000.
   அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் ₹ 84,000.
   31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள் இருப்பு ₹ 10,000.
24. வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?
25. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.
   அ) சொத்தின் மீதான தேய்மானம் ஆ) பதிவுறா பொறுப்புகள்
   இ) கொடுபட வேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்
26. ரோசி, ரதி மற்றும் இராணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1.1.2018 அன்று ரதி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளைய இருப்பு நிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம் ₹ 45,000 பகிர்ந்து தரா நட்டங்கள் இருப்பைக் காட்டியது பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
27. நிதி நிலையறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடுக.
28. புற அகப்பொறுப்பு விகிதம் என்றால் என்ன?
29. ஏதேனும் நான்கு கணக்கியல் அறிக்கைகளைக் கூறு.
30. வெளிச் செல்லும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: 7×3=21**

31. கீதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.
   i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 55,00,000.
   ii) அவ்வாண்டின் இறுதியில் நிலைச் சொத்துகள் ₹ 5,00,000.
32. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015-16 (₹) | 2016-17 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

33. அப்துல் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் செலுத்துமாறு வெளியிட்டது. பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
   i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால் ii) பங்கொன்று ₹ 2 முனைமத்தில் வெளியிட்டால்
34. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
35. பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

| ஆண்டு | முடிவு | தொகை |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

36. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.
37. பின்வரும் விவரங்கள் தூத்துக்குடி இளம் முன்னோடிகள் சங்கத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.
   சங்கத்தில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ₹ 25 ஆண்டுச் சந்தாவாக செலுத்துகின்றனர். ஆண்டிறுதியில் 10 உறுப்பினர்கள் சந்தா செலுத்தாமல் இருந்தனர். ஆனால் நான்கு உறுப்பினர்கள் அடுத்த ஆண்டிற்கான சந்தா தொகையை முன் கூட்டிச் செலுத்தியிருந்தனர்.
38. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று முதல் | 1,00,000 |
| உரிமையாளர் தனது சொந்த பயனுக்காக சரக்கு எடுத்தது | 30,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 15,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 60,000 |

39. முழுமை பெறா பதிவேடுகளின் குறைகள் மூன்றினைத் தருக.
40. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்குகளை வெளியிட முடியுமா? விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **7×5=35**

41. அ) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹ 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவரது ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கிமேல் வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கை ரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தனது சொந்த பயனுக்காக ₹ 30,000 எடுத்துக்கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**(அல்லது)**

ஆ) சந்துரு, விஷால் மற்றும் இரமணன் என்ற கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர். 2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | அறைகலன் | | 60,000 |
| சத்துரு | 60,000 | | இயந்திரம் | | 1,20,000 |
| விஷால் | 70,000 | | பற்பல கடனாளிகள் | 33,000 | |
| இரமணன் | 70,000 | 2,00,000 | கழி: ஐயக்கடன் ஒதுக்கு | 3,000 | 30,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | | 80,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 50,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 20,000 |
| | | 2,80,000 | | | 2,80,000 |

இராமணன் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 2019, மார்ச் 31 அன்று அக்கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) இயந்திரம் ₹ 1,50,000 என மதிப்பிடப்பட்டது.
ii) அறைகலன் மதிப்பில் ₹ 10,000 குறைக்கப்பட்டது.
iii) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 5,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டும்.
iv) ஏடுகளில் பதியப்படாத முதலீடுகள் ₹ 30,000 தற்போது பதியப்பட வேண்டும்.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறு மதிப்பீட்டு கணக்கு தயார் செய்யவும்.

42. அ) ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கைகளிலிருந்து (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் (iii) இயக்க அடக்கவிலை விகிதம் (iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| I விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II இதர வருமானம் | |
| i) முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| III மொத்த வருவாய் (I+II) | 4,04,000 |
| IV செலவுகள் | |
| i) கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| ii) சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| iii) நிதிகள் செலவுகள் | 24,000 |
| iv) இதர செலவுகள் (நிர்வாக & விற்பனை) | 60,000 |
| மொத்த செலவுகள் | 3,24,000 |
| v) வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III-IV) | 80,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

43. அ) கீழ்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல் செலுத்தல் கணக்கிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கை ரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டி பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுது பொருள் | 6,000 |
| உயில் கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது (ஏட்டு மதிப்பு ₹ 17,000) | 16,000 | இருப்பு கீ/இ கை ரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

**(அல்லது)**

ஆ) கணினிமய கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

www.Padasalai.Net www.CBSEtips.in


44\. அ) பின்வரும் தகவல்களிலிருந்து அனு நிறுமத்தின் போக்கு சதவிகிதங்களை கணக்கிடவும்.

| விவரம் | ₹ ஆயிரத்தில் முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| **I பங்கு மூலதனம் & பொறுப்புகள்** | | | |
| i) பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| ii) நீண்ட காலப் பொறுப்புகள் | 200 | 250 | 240 |
| iii) நடப்புப் பொறுப்புகள் | 100 | 80 | 120 |
| **மொத்தம்** | 800 | 880 | 960 |
| **II சொத்துகள்** | | | |
| நீண்ட காலச் சொத்துகள் | 600 | 720 | 780 |
| நடப்புச் சொத்துகள் | 200 | 160 | 180 |
| **மொத்தம்** | 800 | 880 | 960 |

**(அல்லது)**

ஆ) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது இந்திய கூட்டாண்மை சட்டம் 1932-ன் படி கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறுகுறிப்பு தரவும்.

45\. அ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ₹ 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றிற்கு ₹ 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

₹ 2 விண்ணப்பத்தின் மீதும்

₹ 5 (முனைமம் உட்பட) ஒதுக்கீட்டின் மீதும்

₹ 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்

மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

**(அல்லது)**

ஆ) இராஜன் மற்றும் செல்வா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:1 விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். அவர்களது 31.03.2017 நாளன்றைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 25,000 |
| இராஜன் | 30,000 | | அறைகலன் | 1,000 |
| செல்வா | 16,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| | | 46,000 | கடனாளிகள் | 16,000 |
| பொது காப்பு | | 4,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 3,000 |
| கடனீந்தோர் | | 37,500 | வங்கி ரொக்கம் | 12,500 |
| | | | இலாப நட்ட க/கு (நட்டம்) | 10,000 |
| | | 87,500 | | 87,500 |

01.04.2017 - இல பின்வரும் நிபந்தனைகளுடன் கணேசன் என்பவர் புதிய கூட்டாளியாக சேருகிறார்.

i) கணேசன் 1/5 இலாபங்கிற்கென ₹ 10,000 முதல் கொண்டு வருகிறார்.

ii) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் மதிப்பில் 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது. கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்படுகிறது.

iii) கட்டடத்தின் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்படுகிறது. மறுமதிப்பீட்டுக் கணக்கு, புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

46\. அ) ராணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினை தயார் செய்யவும்.

| விவரம் | 31.3.2016 (₹) | 31.3.2017 (₹) |
|---|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| i) பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| ii) நீண்ட காலப் பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| iii) நடப்பு பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| **மொத்தம்** | 9,00,000 | 10,00,000 |
| **II. சொத்துகள்** | | |
| i) நீண்ட காலச் சொத்துகள் | 7,20,000 | 8,00,000 |
| ii) நடப்புச் சொத்துகள் | 1,80,000 | 2,00,000 |
| **மொத்தம்** | 9,00,000 | 10,00,000 |

**(அல்லது)**

ஆ) நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஐந்து காரணிகளைச் கூறி விளக்குக.

47\. அ) நதியா ஜவுளி வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பிலான ₹ 8 அழைக்கப்பட்ட 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இதில் மயூரி பங்கு ஒன்றுக்கு ₹ 6 விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டிற்கான தொகையினைச் செலுத்தி இருந்தார். அவற்றில் 75 பங்குகள் பங்கு ஒன்றிற்கு ₹ 7 பெற்றுக் கொண்டு ₹ 8 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக சௌந்தர்யா என்பவருக்கு மறு வெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறு வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

**(அல்லது)**

ஆ) தினேஷ் மற்றும் சுகுமார் 2018, ஜனவரி 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ₹ 1,50,000 மற்றும் சுகுமார் ₹ 1,20,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

i) தினேஷ் மற்றும் சுகுமார் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்.

ii) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% தரப்பட வேண்டும்.

iii) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது தினேஷ் ₹ 3,600 மற்றும் சுகுமார் ₹ 2,200.

iv) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ₹ 60,000 வழங்கப்பட வேண்டும்.

v) சுகுமாருக்கு தரப்பட வேண்டிய கழிவு ₹ 80,000. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் வட்டி சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹ 2,20,000 இலாப நட்ட பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com